**செய்தி வெளியீடு எண்: 190** **நாள்: 07.03.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 6.3.2020 அன்று தலைமைச் செயலகத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மனையேறிப்பட்டியில் அமைந்துள்ள அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும், சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை சார்பில் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளியில் அமைந்துள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தையும் திறந்து வைத்தார்கள்.

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநரகத்தின் கீழ் செயல்படும் அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவ வசதி போன்ற வசதிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், உடல் திறனுடைய இல்லவாசிகளுக்கு பாய் நெய்தல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணி தயாரிப்பு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய ஊதியமும் வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், மனையேறிப்பட்டியில் அமைந்துள்ள அரசு மறுவாழ்வு இல்லக் கட்டடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் இருந்ததால் இல்லவாசிகளின் நலன் கருதி புதிய கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி, இல்லவாசிகளின் பயன்பாட்டிற்காக 1 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லப் புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 13.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், ‘‘தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்’’ என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பஞ்சப்பள்ளியில் அமைந்துள்ள சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு, 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், துயில் கூடங்கள், ஆற்றுப்படுத்தும் அறை, பல்நோக்கு கூடம், பொழுதுபோக்கு அறை, மருத்துவ அறை, கண்காணிப்பாளர் அறை, அலுவலக அறை, குளியலறைகள், கழிவறைகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மாற்றுத்திறனாளிகள் நலத் துறை செயலாளர் திரு.சி. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., சமூக பாகாப்புத் துறை ஆணையர் திரு.ஆர். லால்வேனா, இ.ஆ.ப., மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் திரு. ஜானி டாம் வர்கீஸ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 7.3.2020**